Source: *Tamil Murasu*, p3
Date: 22 September 2015

# சந்திரபாபு நாயுடு: ஆந்திரா வளர்ச்சியில் பங்கேற்க வாருங்கள்




ஆந்திராவில் முதலீட்டு வாய்ப்புகள் கொட்டிக் கிடக்கின்றன என்று நேற்று சிங்கப்பூரில் பேசிய ஆந்திரப் பிரதேச மாநில முதல்வர் சந்திரபாபு நாயுடு சொன்னார். **படம்: திமத்தி டேவிட்**

தமிழவேல்

இது இந்தியாவுக்கான பிரகாசமான காலம் என்றும் குறிப்பாக ஆந்திர மாநிலத்துக்கு மிகவும் பொன்னான காலம் என்றும் கூறிய ஆந்திரப் பிரதேச முதல்வர் திரு சந்திரபாபு நாயுடு அங்கு இருக்கும் வாய்ப்புகளைச் சரியான தருணத்தில் பயன்படுத்திக்கொள்ளுமாறு சிங்கப்பூரில் உள்ள முதலீட்டாளர்களையும் வர்த்தகர்களையும் கேட்டுக் கொண்டார்.

ஆந்திரப் பிரதேச மாநிலத்தை ஓர் ஆண்டு மூன்று மாதமான குழந்தை என வருணித்த திரு நாயுடு, "அங்கு எண்ணற்ற முதலீட்டு வாய்ப்புகள் இருக்கின்றன," என்று குறிப்பிட்டார்.

"இந்தியா வேகமாக வளர்ச்சி அடைந்து வருகிறது. உலகமே அதைக் கவனித்து வருகிறது. சீனா, அமெரிக்கா போன்ற நாடுகள் பிரச்சினைகளை எதிர்நோக்கும் வேளையில் ஈரிலக்க வளர்ச்சியை இந்தியா விரைவில் அடையும்," என்றார் அவர்.

இந்தியாவிலேயே இரண்டாவது நீண்ட கடற்கரை, மற்ற மாநிலங்களுடன் இணைக்கும் போக்குவரத்துக் கட்டமைப்பு, இயற்கை வளம், நீர் வளம், விவசாயம், மனித வளம் போன்ற வளர்ச்சிக்குத் தேவையான பல சாதகமான அம்சங்கள் ஆந்திரப் பிரதேசத்தில் உள்ளன என்று கூறிய அவர், ஆந்திரப் பிரதேசத்தைத் துறைமுக, தொழில்துறை மையமாக மாற்ற திட்டமுள்ளது என்றும் சொன்னார்.

தகவல் தொழில்நுட்பம், தளவாடம், உற்பத்தி, சுற்றுப் பயணத் துறை போன்ற பல துறைகளை உள்ளடக்கிய நகரமாக ஆந்திரப் பிரதேசத்தின் புதிய தலைநகரமான அமராவதி திகழும் என்பதை சுட்டிய அவர், ஆந்திரப் பிரதேசத்தின் வளார்ச்சியில் பங்கேற்க சிங்கப்பூருக்கு அழைப்பு விடுத்தார்.

> இந்தியா ஈரிலக்க வளர்ச்சியை விரைவில் எட்டும். இந்தியாவில் முதலீடு செய்வதற்கு நல்ல தருணம்.
>
> **ஆந்திர மாநில முதல்வர் சந்திரபாபு நாயுடு**

"அடுத்த முறை சிங்கப்பூருக்கு நான் வருகை புரியும்போது திடமான மேம்பாட்டுத் திட்டங்களுடன் இங்கு வருவேன். முதலீட்டு விண்ணப்பங்கள் விரைவாக 21 நாட்களுக்குள் ஆலோசிக்கப்படும், நீங்கள் வேறு எதற்கும் எவருக்கும் பணம் கொடுக்க வேண்டியதில்லை. முதலீட்டுத் திட்டத்துடன் வரும் ஒவ்வொருவருக்கும் வேண்டிய உதவிகள், மானியங்கள் கொடுக்கப்படும். எந்தப் பிரச்சினையானாலும் அது தீர்த்து வைக்கப்படும். இது நான் கொடுக்கும் உத்தரவாதம்," என்றார் திரு சந்திரபாபு நாயுடு.

சிங்கப்பூருக்கு மூன்று நாள் வருகை புரிந்துள்ள திரு நாயுடு, தெற்கு ஆசிய ஆய்வுக் கழகத்தின் ஏற்பாட்டில் நேற்று ஷெரட்டன் டவர்ஸ் ஹோட்டலில் நடைபெற்ற கலந்துரையாடல் நிகழ்ச்சியில் சிறப்புரை ஆற்றினார்.

கழகத்தின் தலைவரும் பொதுத் தூதருமான கோபிநாத் பிள்ளையின் தலைமையில் கலந்துரையாடல் நடைபெற்றது.

கலந்துரையாடலுக்குப் பின் நடந்த கேள்வி பதில் அங்கத்தில் நிலம் பெறுவது, மக்கள் தொகை அதிகரிப்பு, கல்வித்தரத்தை உயர்த்துவது, உள்ளூர் தொழில் முனைவர்கள் வளர்வதற்கான வாய்ப்புகள் போன்ற பலதரப்பட்ட கேள்விகளுக்கும் திரு நாயுடு பதில் அளித்தார்.

ஆந்திரப் பிரதேசத்தில் அமராவதி, விசாகப்பட்டினம், திருப்பதி ஆகிய மூன்று நகரங்களைக் கல்விக்கான மையங்களாக மாற்றத் திட்டம் உள்ளது என்ற அவர் உயிரியல் தொழில்நுட்ப வளர்ச்சியிலும் அதிகக் கவனம் செலுத்தவுள்ளதாகக் குறிப்பிட்டார்.

நேற்று முன்தினம் சிங்கப்பூர் வந்த திரு நாயுடு மலேசிய, சிங்கப்பூர் வர்த்தக, முதலீட்டு நிறுவனங்களைச் சந்தித்துப் பேசினார்.

இன்று பிரதமர் லீ சியன் லூங்கைச் சந்திக்கவுள்ளதாகவும் திரு நாயுடு சொன்னார். அவருடன் ஆந்திரப் பிரதேசத்தின் பல அமைச்சர்களும் அதிகாரிகளும் சிங்கப்பூர் வந்துள்ளனர்.

திரு சந்திரபாபு நாயுடுவின் வேண்டுகோளுக்கு இணங்க ஆந்திரப் பிரதேச மாநிலத்தின் புதிய தலைநகரமான அமராவதியின் வடிவமைப்புப் பணிகளைச் சிங்கப்பூர் சார்பாக இண்டர்நேஷனல் கன்சல்டண்ட்ஸ், ஜூரோங் இண்டர்நேஷனல் ஆகியவை இணைந்து மேற்கொண்டன. இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் இவ்வாண்டு ஜனவரி மாதம் 12ஆம் தேதி ஹைதராபாத்தில் போடப்பட்டது.

மொத்தம் 7,235 சதுர கி.மீ. பரப்பளவுக் கொண்ட இப்பகுதியின் (சிங்கப்பூரை விட 10 மடங்கு அதிகம்) வடிவமைப்புப் பணி மூன்று கட்டங்களாக நிறைவேற்றப்பட்டு அமராவதி நகரின் பெருந்திட்டம் திரு நாயுடுவிடம் ஜூலை மாதம் ஒப்படைக்கப்பட்டது. முன்பு ஒரே மாநிலமாக இருந்த இந்தியாவின் ஆந்திரப் பிரதேசம், தெலுங்கானா, ஆந்திரப்பிரதேசம் என இரு மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டன.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.